தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யப்படும் போது அந்த சொத்துக்களுக்குரிய உரித்தான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பகுப்பு முழுவதும் மீள்மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் கிரயம் ரூபா 7,000,000 ஆன மோட்டார் வாகனமொன்றை மீள் மதிப்பீடு செய்யும் போது கவனத்திற் கொள்ளப்படாதிருந்ததுடன் நியமத்தின் 15 ஆம் பந்திக்கு முரணாக ரூபா 20,591,557 பெறுமதியான அவதானிப்பு உபரகணங்கள் (Monitoring Equipment) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணமாக கணக்கீடு செய்யப்படாமல் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	நிறுவனத்திற்குச் சொந்தமாக 36 வாகனங்கள் காணப்பட்டதுடன் 2024.12.31 ஆம் திகதி வரையில் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட வாகனங்கள் 35 ஆகும். அந்த வாகனங்கள் யாவும் மீள் மதிப்பீடு செய்யப் பட்டிருந்தது. மிகுதியான ஒரு வாகனம் 2025.12.31 ஆந் திகதி முழுமையாக பெறுமானத் தேய்வு செய்வதற்கு தீர்மானிக் கப்பட்டதுடன் 2025 ஆம் ஆண்டில் அந்த வாகனத்தை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த அவதானிப்பு உபகரணம் மண்சரிவு இடைவெளிகளை அளவிடுவதற்காக நிலத்தைத் தோண்டி நிலத்தின் உற்பகுதியில் வைக்கப்படுகின்றது. இதன் மூலம் மண்சரிவு முன் அனர்த்தங்களை வெளியிடுவதற்குரிய தரவுகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. நிலத்தின் உற்பகுதியில் வைப்புச் செய்யப்பட்ட பின்னர் இந்த உபகரணங்கள் மீண்டும் அகற்றுவதற்கோ அல்லது பௌதீக மெய்மை ஆய்வு செய்யப்பட முடியாது. அதனால் அந்த உபகரணங்கள், ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணமாக வகைப்படுத்த முடிவதில்லை.	இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீள்மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் (மானியங்கள் தவிர) 2024 ஆம் ஆண்டிற்குரிய பெறுமானத் தேய்வு ரூபா 18,956,312 வரிக்கு முன் இலாபத்தில் சீராக்கப்படாமல் வரிக்குப் பின் இலாபத்தில் சீராக்கப்பட்டு மாற்றல்கள் அல்லாத வருமானத்தில் (Non Exchange Revenue) கழித்து காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக வரிக்கு முன் இலாபம் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2023 ஆம் ஆண்டில் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டதுடன் அந்த மொத்த பெறுமானத் தேய்வு அளவும் முன்னைய ஆண்டு களின் செயற்பாட்டு இலாபத்தில் தற்போது சீராக்கப்பட்டுள்ளது.	2024 ஆம் ஆண்டிற்குரிய முழுமையான பெறுமானத் தேய்வுப் பெறுமதி வரிக்கு முன் இலாபத்தில் கழிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் வாகனப் புகைப் பரிசோதனை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் 2023 திசம்பர் 18 ஆந் திகதி தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த கிரயம் ரூபா 30,821,892 பெறுமதியான நடமாடும் காற்றின் தரத்தை அளவிடும் உபகரணம் மீளாய்வாண்டின் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	இந்த நடமாடும் காற்றின் தர அளவீட்டு உபகரணம் பொருத்தப்பட்டுள்ள லொறி வண்டியின் உரித்து 2024.12.31 ஆந் திகதி வரையில் மோட்டார் வாகனம் பதிவு செய்யும் திணைக்களத்தின் மூலம் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு மாற்றப்படவில்லை. அதனால் நிறுவனத்தின் சொத்தொன்றாக கணக்கீடு செய்யப்படவில்லை.	சொத்துக்கள் தொடர்பாக கணக்குகளில் வெளிப்படுத்தி சொத்தொன்றின் உரித்தை நிறுவனத்திற்கு விரைவாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டிய பணம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோரில் கூட்டுமொத்தமாக ரூபா 52,403,142 கடன் மீதி அறவிட வேண்டியிருந்து. அதில் ரூபா 27,322,941 அதாவது 50.21 சதவீத கடன் மீதி 3 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதியாக இருந்ததுடன் ரூபா 30,959,296 அதாவது 56.89 சதவீத கடன் மீதி ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட பழைய கடன் மீதியாக இருந்தமையால் இந்த மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த கடன் மீதியில் ரூபா 11.1 மில்லியன் கிடைத்துள்ளதுடன் ரூபா 20 மில்லியன் கடன் மீதியை அறவிட முடியாதிருந்தமையால் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் குழுவொன்றை நியமித்து பதிவழிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டதுடன் உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது.	விரைவாக இந்த பணத்தை அறவிடுவதற்கும், தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுட னான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தன் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 371(2)(ஆ)	(i) செயல் நிமித்த உப கட்டுநிதி வழங்கும் போது எந்தவொரு விஷேட பணிகளுக்காகவும் பதவி நிலைத் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தின் போது ரூபா 100,000 ஆகக் கூடிய அளவு வரை செயல் நிமித்த உப கட்டு நிதியை வழங்குவதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு முடியுமாக இருந்த போதிலும் அதற்கு முரணாக 18 சந்தர்ப்பங்களின் போது ரூபா 488,000 நிறுவனத்தால் பதவி நிலை அற்ற உத்தியோகத்தர்களுக்கு செயல் நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.	நிருவாக ரீதியான மற்றும் ஏனைய நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக சில சந்தர்ப்பங்களின் போது பதவி நிலையற்ற உத்தியோகத்தர் களுக்கும் உப கட்டுநிதி வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ளது. எனினும் 2024.05.20 ஆந் திகதி முதல் கனிஷ்ட முகாமையாளர்களின் கீழ் உள்ள ஊழியர்களுக்காக முற்பணம் வழங்குதல் நிறுத்தப்பட்டுள்ளது.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
		(ii) செயல் நிமித்த உப கட்டுநிதி யைப் பெற்ற உத்தியோகத்தர்களால் அந்தப் பணிகள் முடிவடைந்தவுடன் முற்பணம் தீர்த்துவைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 40 சந்தர்ப்பங்களின் போது அவ்வாறு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,713,050 முற்பணத்தை தீர்ப்பதற்காக 34 நாட்கள் முதல் 93 நாட்கள் வரையிலான கால வீச்சிலான தாமதம் ஏற்பட்டிருந்தது.	வேலைத்தளங்கள் அநேகமானவை பிரதான அலுவலத்தில் இருந்து தூர இடத்தில் அமைந்துள்ளதுடன் ஒரு மாதத்திற்கு அதிகமான காலம் வேலைத் தளம் செயற்படுகின்றது. வேலைத் தளங்களின் பணிகள் நிறைவு மீண்டும் பிரதான அலுவலகத்திற்கு வருகை தந்தவுடன் விஷேட முற்பணம் தீர்த்துவைக்கப்பகின்றது. முற்பணம் தீர்த்து வைக்காத உத்தியோகத்தர்களுக்கு குறுந் தகவல் அனுப்புதல் மற்றும் உரிய தலைவர்கள் மூலம் அறிவிக்கும் திட்ட	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

			முறைமையும் உரிய உத்தியோகத்தர்களின் விடயங்களை விசாரிப்பதன் மூலம் இந்த நிலைமைய குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(ஆ)	இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபனவிதிக் கோவையின் XLVIII அத்தியாயம்	நிறுவனத்தில் 23 உத்தியோகத்தர்களால் 29 சந்தர்ப்பங்களின் போது போலியான பட்டியல் மற்றும் போலியான உத்தியோகபூர் முத்திரை தயாரித்து தொகுதி உயிர் காப்புறுதி மற்றும் மருத்துவக் காப்புறுதி முறைமையின் கீழ் ரூபா 1,820,000 மருத்துவப் பட்டியல்கள் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு போலி ஆவணங்கள் தயாரித்து காப்புறுதி இழப்பீடு பெற்ற உத்தியோகத்தர்கள் ஆறு பேர் தொடர்பாக தாபன விதிக்கோவையின் எற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	போலி ஆவணங்கள் சமர்ப்பித்து காப்புறுதி பணம் பெற்ற ஊழியர்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XLVIII அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் படுகின்றது.	போலி ஆவணங்கள் தயாரித்து காப்புறுதி இழப்பீடு பெற்ற உத்தியோகத்தர் தொடர்பாக தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2018 சனவரி 24 ஆம் திகதிய இலக்கம் 02/2018 என்ற அரச நிருவாக சுற்றறிக்கை 02ஆம் பந்தி மற்றும் இணைப்பு 02 படிவம்	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மனிதவள திட்டமொன்று நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	நிறுவனத்தின் நிருவாக பிரிவில் உயர் பதவிகள் யாவும் உரிய பிரகாரம் நிரப்பப்படாதிருந்தமையால் மனிதவளத் திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. தற்போது உதவி பணிப்பாளர் நிருவாக பதவி நிரப்பப்பட்டுள் ளதுடன் மனிதவளத் திட்டம் தயாரிக்கப்படுகின்றது.	சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மனித வளத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 205,652,593 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 235,379,560 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 29,726,967 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஏனைய வருமானத்தில் உள்ளடங்கிய வட்டி வருமானம் ரூபா 46,698,876 இனால் குறைவடைந்தமை, சம்பளம் மற்றும் வேதனங்கள் ரூபா 96,537,786 இனால் அதிகரித்தமை மற்றும் பயன்படுத்தப்பட்ட வளங்கள் மற்றும் நுகர்வுப் பொருள் செலவினம் ரூபா 80,144,515 இனால் அதிகரித்தமை என்பன பிரதான காரணமாக இருந்தது.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

சுற்றாடல் கற்கைகள் மற்றும் சேவை, மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவம், மனித குடியிருப்பு திட்டம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் கட்டிடப் பொருட்கள் ஆராய்ச்சி, செயற்திட்ட முகாமைத்துவம் என்ற பிரிவுகளின் வருமானம் 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டில் முறையே 29, 23, 9, 27, 124 சதவீத அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. ஏனைய வருமானம் 37 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமை அவதானிக்கப்பட்டதுடன் சம்பளம் மற்றும் வேதனம், வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருள் செலவினம் முறையே 27, 39 சதவீதம் உயர்வடைந்து சென்றமையும் அவதானிக்கப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிறுவனத்திற்காக சட்டரீதியான நிலைமையை கையளிப்பதற்காக சட்டமொன்றை தயாரிப்பதற்காக சமர்ப்பித்த அமைச்சரவைக் குறிப்பு 2021 ஒக்டோபர் 12 ஆந் திகதிய அங்கீகாரம் கிடைத் திருந்ததுடன் தயாரிக்கப்பட்ட சட்ட வரைவு 2022 செப்டெம்பர் 26 ஆந் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் அந்த சட்டம் தயாரித்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீண்டும் 2024 யூலை 17 ஆம் திகதி அமைச்சரவைக்கு குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்று சட்ட வரைஞரினால் தயாரிக்கப்பட்ட இறுதி வரைவு 2024 ஆகஸ்ட் 30 ஆந் திகதி அரசாங்கத்தின் வர்த்தமானியில் பிரசுரித்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக சபாநாகர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டு 32 வருடங்கள் அளவிலான காலம் கடந்திருந்த போதும் சட்ட ரீதியான	இறுதி வரைவு சட்டம் 2024.08.30 ஆம் திகதி அரசாங்கத்தின் வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டுள்ளதுடன் அந்த உத்தேசிக்கப்பட்ட சட்ட வரைவின் பிரகாரம் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்காக பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரத்திற்காக புதிய அமைச்சரவைக் குறிப்பொன்று தயாரித்து பாதுகாப்பு அமைச்சரின் கையொப்பத் திற்காக அனுப்பப்பட்டுள்ளது.	விரைவாக சட்டத்தை அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும்.

	தன்மையை கையளிப்பதற்காக சட்டமொன்றை அங்கீகரித்துக் கொள்வதற்கு நிறுவனத்திற்கு முடியாதிருந்தது.		
(ஆ)	இரத்தினபுரி மாவட்ட அலுவலகக் கட்டிட நிர்மாணத்திற்காக 30 வருட வாடகை அடிப்படையில் ரூபா 7,965,000 நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தி இரத்தினபுரி புதிய நகரத்தில் அமைந்துள்ள காணிப் பகுதியொன்று கொள்வனவு செய்யப்பட்டு அரசாங்கத்தின் நிதி ஏற்பாடு ரூபா 54,327,029 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் 243 நாட்களில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் இந்த ஒப்பந்தம் தாமதமடைந்திருந்ததுடன் தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அலுவலக பௌதீகப் பரிசோதனையின் போது கட்டிடத்தின் நிலத்தில் அநேகமான இடங்களில் டைட்டானியம் இடப்பட்ட பகுதி உடைந்திருந்த துடன் அதிக மழையுடன் நீர் அலுவலக கட்டிடத்திற்குள் வழிந்தோடி சென்றதன் காரணமாக அலுவலக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வசதியீனமாக இருந்தமையும் கட்டிடத்தில் நீர் கசிவின் காரணமாக சுவரில் பூஞ்ஞனங்கள் கட்டியிருந்தமை, மேல் மாடியில் சுவர் வெடித்திருந்த போதும் அவற்றை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் நிறுத்தி வைக்கப்பட்ட பணமும் விடுவிக்கப்பட்டிருந்தது.	2020 ஆண்டின் மார்ச் மாதம் முதல் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமை மற்றும் 2022 ஆம் ஆண்டின் போது இலங்கையில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியால் இந்த செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றத்திற்கு பாதகமாக தாக்கமளித்திருந்தது. இந்த விடயங்களைக் கவனத்திற் கொண்டு ஒப்பந்த கால எல்லையை நீடிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந் தமையால் தாமதக் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கட்டிடத்தில் உள்ள குறைபாடுகளை தயாரிக்கும் காலத்தில் அறிக்கையிடப்பட்ட வழுக்கள் யாவும் சரிசெய்யப் பட்டுள்ளது. அதனால் நிறுத்திவைக்கப்பட்ட பணத்தை விடுவிக்கப்பட்டி ருந்தது. தற்போது காணப்படுகின்ற குறைபாடுகள், வழுக்களை தயாரிக்கும் காலத்தில் (Defect Liability Period) பின்னர் ஏற்பட்ட குறைபாடு களாக இருந்ததுடன் இந்த வழுக்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்ப டுகின்றது.	திட்டமிடப்பட்ட பிரகாரம் நிர்மாணித்தல் நடவடிக்கைகள் நியமத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட தா என சரியான மேற் பார்வையொன்று மேற்கொள்ள வேண்டி இருந்ததுடன் கட்டிடத்தின் வழுக்களைத் தயாரிக்கும் காலத்தில் ஒப்பந்த காரரினால் மேற் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	கட்டிடமொன்றை நிர்மாணித்த பின்னர் அந்தக் கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட திட்டம் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குகின்றமைக்கு தரச் சான்றிதழ் ஒன்று (COC) பெறவேண்டியிருந்த போதிலும் நிறுவனத்தின் பிரதான அலுவலகத்தில் அமைந்துள்ள ரூபா 767,995,987 பெறுமதியான புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் தரச் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை.	புதிய கட்டிடத்திற்காக தரச் சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	தரச் சான்றிதழை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஈ)	ஆபத்துடனான 14 மாவட்டங்களில் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு மண்சரிவு முன் விபத்தை அறிவிப்பதற்கான தரவுகளை பெற்றுக் கொள்வதற்கு 330 தானியங்கி மழை மானிகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அத் திகதியில் தானியங்கி மழை மானிகள் 67 செயலிழந்து காணப்பட்டது. மேலும் மேற்கூறப்பட்ட செயற் பாடுகளில் காணப்படுகின்ற தானியங்கி மழை மானிகள் முறைமை இருப்பு 251 இற்கிடையே தற்போது வரையில் 192 முறைமைகளின் பங்களிப்பு மாத்திரம் பெறப்பட்டு மண்சரிவு முன் விபத்து அறிவித்தல் விநியோகிக்கப்படுகின்ற போதும் செயலிழந்த 126 மழை மானிகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த மழைமானிகளில் அநேகமானவை ஸ்தாபிக்கப்பட்டு தற்போது 07 வருடங்களுக்கும் மேற்பட்டு இருந்ததுடன் அவற்றின் உள்ளக இலத்திரனியல் துணைப்பாகங்களின் செயற்படுகாலம் காலாவதியாகி இருந்தது. அதன் பிரகாரம் முழுமையாக செயலிழந்த மழை மானிகளை பழுதுபார்ப்பதற்கு கணிசமான செலவினமொன்றை செய் வேண்டி ஏற்படுகின்றமையால் அவை வருடாந்த பராமரிப்பு செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்படவில்லை. இந்த விடயங்களைக் கவனத்திற்கொண்டு கால நிலை தாக்கங்களைக் குறைக்கும் பல்வேறு கட்ட நிகழ்ச்சித் திட்ட நுழைவு செயற்திட்டத்தின் (CresMPA) கீழ் மண் காணப்படுகின்ற 14 மாவட்டங்களில் ஸ்தாபிக்கப் பட்டுள்ள சகல மழைமானி களை மீள் ஸ்தாபிப்பதற்காக திட்டமிடப்பட்டதுடன் அதன் கேள்வி கையளித்து தற்போது 200 மழை மானிகள் அளவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 2025 ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரையில் சகல மழை மானிகளையும் மீள் ஸ்தாபிப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	தானியங்கி மழை மானிகள் முறைமையை உரிய வகையில் பராமரித்தல் வேண்டும்.
(உ)	தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவத்தின் மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவு (LRRMD) மூலம் 13 மாவட்டங்களில் 32593 சதுர கிலோ மீற்றர் நில அளவை மேவுகை செய்யும் வகையில் 1:50000 அளவில் மண்சரிவு வலய வரைபடமிடல் 2022 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் முன்னுரிமை அடிப்படையில் அதில் 25649 சதுர கிலோமீற்றருக்காக மாத்திரம் 1:10000 அளவிடையில் வரைபடம் இடும் நடவடிக்கைகள் கணக்காய்வுத் திகதி வரையில் 10560 சதுர கிலோமீற்றரை மேவுகை செய்யும்	1:10,000 அளவிடையில் மண்சரிவு இடர் வலய வரைபடம் தயாரிக்கும் போது 1:50,000 அளவிடையில் வரைபடம் இல்லாமல் பிரதேசத்தில் ஆய்வுகளின் மூலம் கணிசமான தரவுகள் அளவில் பெறவேண்டியிருந்ததுடன் அதனுடன் ஒப்பிடும் போது கணிசமான கிரயம், மனிதவளம் மற்றும் காலம் செலவாகின்றது. அதனால் முதலாவது முன்னுரிமையாக இனங்காணப்பட்ட நில அளவில் 10,560 சதுரக் கிலோ மீற்றரை	மண்சரிவு வலய வரைபடமாக்குதலை விரைவுபடுத்தி இடர் ஆபத்துக்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	வகையில் மேற்கொள்ளப் பட்டிருந்தது. அது தெரிவு செய்யப்பட்ட மொத்த நில அளவின் வீதமாக 41 சதவீத அளவும் மற்றும் முதலாவது முன்னுரிமையும் மட்டத்தின் பிரகாரம் 84 சதவீத அளவும் ஆகும். அந்த வரைபடத்தின் அளவை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தால் வீடுகளை, வியாபாரங்கள், பாடசாலைகள் மற்றும் மதத் தளங்களின் கட்டிடங்கள் 84755 அதிக ஆபத்து பிரதேசங்களில் காணப்படுவதாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் முன்னுரிமை அடிப்படையில் தெரவு செய்யப்பட்ட 25649 சதுர கிலோ மீற்றர்களில் 15089 சதுர கிலோ மீற்றர் அளவொன்று 1:10000 அளவிடையில் வரைபடம் இடப் படாமையினால் அந்த நில அளவில் அதிக ஆபத்துடன் கட்டிடம் எவ்வளவு அளவு காணப்படுகின்றது என இனங் காணப்பட்டிருக்கவில்லை.	மேவுகை செய்யும் வகையில் 1:10,000 அளவிடையில் வரைபடம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பிரதேசங்களில் வரைபடம் எதிர்வரும் ஆண்டுகளில் தயாரிப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.	
(ஊ)	மண்சரிவு அபாயத்தைக் குறைக்கும் செயற் திட்டம் (Landslide Mitigation Project) இலங்கை இரசாயன ஆபத்து ஒழுங்கு முறையாக மதிப்பீடு செய்யும் செயற் திட்டம் மற்றும் தொழல்நுட்ப பங்களிப்புடன் மிக ஆபத்தான வலயங்களில் வாழ்கின்ற நபர்களை பாதுகாப்பாக இடங்களில் மீள் குடியமர்த்தும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பதுளை, களுத்துறை ஆய்வுகூட வசதிகளுடன் அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 236,767,553 ஆன திறைசேரி நிதி ஏற்பாடு உரிய பணிகளுக்காக பயன்படுத்தப்படாமல் 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிலையான வைப்புக்களில் வைப்புச் செய்யப் பட்டிருந்தது.	<u>**மண்சரிவு ஆபத்துக்களைக் குறைக்கும் செயற்திட்டம் - மீதி மில்லியன் 134**</u> 2024 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாடான ரூபா 100 மில்லியன் தொகை நிறுவனத்திற்கு 2024 ஆகஸ்ட் மாதத்தின் பின்னரே கிடைத்தி ருந்தது. அதனால் சகல ஒப்பந்தங்களும் கையளித்து 04 ஒப்பந்தங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப் பட்டதுடன் 03 ஒப்பந்தங்களின் வேலைகள் இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது. <u>**மீள் குடியமர்த்தல் செயற்திட்டம் - மீதி ரூபா 19**</u> மில்லியன் இடர் உதவி சேவை நிலையத்தினால் பெயர் குறிப்பிடப்பட்டு மீண்டும் குடியிருக்கும் செயற் திட்டத்தின் தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதற்காக அந்த தொகை ஒதுக்கப்பட்டிருந்தது.	நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட பணிகளில் திட்டமிடப்பட்ட வகையில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		செயற்திட்டத்தின் செயற்பாடு நிலையில் காணப்படுகின்ற மெதுவான போக்கின் காரணமாக இந்த தொகையை செலவிடுதல் குறைவான செயல் முன்னேற்றத்துடன் உள்ளது. **<u>ஆய்வுகூட வசதிகளுடன் களுத்துறை மாவட்ட அலுவலகத்தை நிர்மாணித்தல் - மீதி ரூபா 81 மில்லியன்</u>** மாவட்ட அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் புதிய கட்டடத்தை நிர்மாணிப்பதை கைவிடுவதற்கு அரசினால் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானித்தின் அடிப்படையில் மாவட்ட அலுவலகம் நிர்மாணிப்பதில் தாமதமடையவேண்டி ஏற்பட்டிருந்தது. **<u>இரசாயன ஆபத்துக்களை மதிப்பீடு செய்யும் செயற்திட்டம் - மீதி ரூபா 2.4 மில்லியன்</u>** இந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்காக தரப்பினர்களின் இறுதிக்கூட்டம் ஒழுங்கமைக் கப்பட்டு உரிய உத்தியோகத்தர்கள் / நிறுவனத்திற்கு அறிவித்தல் மற்றும் தேவையான உபகரணங்கள் மற்றும் தேவையான ஒழுங்குபடுத்தல் அட்டவணை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் போது அதற்காக தேவையான கொள்கை ரீதியான மற்றும் உபாயத் திட்டங்கள் சமர்ப்பிப்பதற்கும் மற்றும் மீண்டும் மீளாய்வு செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	
(எ)	2024 ஆம் ஆண்டில் அகற்றப்பட்ட ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் இழிவுப் பெறுமதி ரூபா 4,030,677 ஆக இருந்ததுடன் இந்த சொத்துக்களை அகற்றியதால் நிறுவனத்திற்கு ரூபா 3,142,182 நட்டம் ஏற்பட்டிருந்தது.	இவ்வாறு அகற்றப்பட்ட உபகரணங்களில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய UT Machine ஒன்று உள்ளடங்கி இருந்ததுடன் அது முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட	மீள் மதிப்பீடு மேற் கொள்ளும் போது பெறுமதிகள் சரியாக கணிப்பிடப்படல் வேண்டும்.

	சொத்தாகும். எனினும் 2023 இன் சொத்துக்கள் மீள் மதிப்பீட்டின் போது அது ரூபா 2,800,000 தொகையில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அது இரும்பு அல்லாமல் உருக்கினால் தயாரிக்கப்பட்டி ருந்தமையால் கவனத்திற்கொள்ளக்கூடிய தொகையில் விற்பனை செய்வதற்கு முடியாதிருந்தது.	

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆம் ஆண்டின் திசம்பர் மாதத்தின் போது கைத்தொழில் அபிவிருத்தி சபையிலிருந்து ரூபா 5,000,000 பெறுமதியான AC டீசல் உற்பத்தி இயந்திரம் ஒன்று (80KV A synchronous) கிடைத்திருந்ததுடன் அதனை செயற்படு நிலையில் கொண்டு வருதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்காமையின் காரணமாக விளைவற்றுக் காணப்பட்டது.	இந்த மின் பிறப்பாக்கி இயந்திரம் இடர்முகாமைத்துவ பிரிவியிலிருந்து மானியமாக கிடைத்திருந்ததுடன் நிறுவனத்தின் மின்சார வழங்கல் முறைமைக்குப் பொருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.	சொத்துக்களை பயன்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் இறுதி வரையிலும் நிறுவனத்திற்குச் சொந்தமான நிலையான வைப்புக்களில் ரூபா 674,298,014 முதலீடு செய்யப்பட்டிருந்த போதும் நுவரேலியா மாவட்ட அலுவலகத்திற்காக காணி யொன்றைக் கொள்வனவு செய்து அலுவலகத்தை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் நுவரேலியாக அலுவலகத்திற்காக கட்டிட வாடகையாக ரூபா 13,770,000 செலுத்தப்பட்டிருந்தது.	மாவட்ட அலுவலத்தை நிர்மாணிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் புதிய கட்டிடத்தை நிர்மாணித்தல் கைவிடுவதற்கு அரசினால் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் நிர்மாணங்களை தாமதப்படுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. எனினும் 2025 ஆம் ஆண்டின் 02 மாவட்ட அலுவலகங்களை நிர்மாணிப்பதற்கோ அல்லது கொள்வனவு செய்வதற்காக அங்கீகாரத்தைக் கோரி நிதி அமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ள துடன் அங்கீகாரம் கிடைத்ததன் அடிப்படையில் மாவட்ட அலுவலகங்களை நிர்மாணிப்ப தற்கோ அல்லது கொள்வதற்கு செய்வதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது.	தேவைகளின் பிரகாரம் மாவட்ட அலுவலகங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைளை விரைவுபடுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை

இம்புல்பே பிரதேச செயலகப் பிரிவில் இறுதிப் பட்டியல் வழுக்கள் மற்றும் பொல்தும்பே கிராமத்தில் மண்சரிவு மற்றும் கல் தயாரிக்கும் போது நில குறைபாடுகள்

புரழும் ஆபத்தைக் குறைக்கும் செயற்திட்டத்தின் கீழ் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் ஒப்பந்தகாரருடன் 2024 பெப்ரவரி 17 ஆந் திகதி கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்ட 03 தூண்கள் பௌதீக ரீதியில் பரீட்சிக்கப்பட்டது. அதாவது DS(M)-A பெயருடைய தூணில் அளவிடை அறிக்கையில் தூணின் நீலம் 44.5 மீற்றராகக் குறிப்பிட வேண்டியிருந்த போதிலும் பௌதீக ரீதியில் அது 41.5 மீற்றர் ஆகும். மேலும் DS(M)-D தூணின் வடிகாணின் படிக்கட்டுக்களின் இறுதியில் உள்ள குழியில் கொங்கிறீட் கனம் 150 மில்லி மீற்றர் ஆக இருக்க வேண்டிய போதிலும் அது 90 மில்லி மீற்றராகக் காணப்பட்டதுடன் காணின் ஓரத்தில் 10 மில்லி மீற்றர் கம்பி 03 இடவேண்டியிருந்த போதிலும் 02 கம்பி இடப்பட்டிருந்தமையும் 12 மில்லி மீற்றர் கம்பிக்குப் பதிலாக 10 மில்லி மீற்றர் கம்பி ஈடுபடுத்தப்பட்டிருந்தது. மேலும் Y வடிவத்தில் உள்ள காணின் குழி 150 மில்லி மீற்றர் கனத் துடன் கொங்கிறீட் இடவேண்டியிருந்த போதிலும் 05 இடங்களைப் பரீட்சித்த போது 50 மில்லி மீற்றர் அளவு இடப்பட்டிருந்தது. மேலும் காணின் இரு பக்கமும் உள்ள சுவர்களில் பலகை சட்டகம் ஈடுபடுத்தப்படாமல் கொங்கிறீட் இடப்பட்டிருந்தது. கொங்கிறீட் இடும் போது குறித்துரைத்த நியமத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படாதிருந்தமையால் அது பொருத்தமானதாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.	அளவையாளர்களின் பரிசோதனையின் அடிப்படையில் தேவையான திருத்தங்கள் மேற் கொண்டு கொடுப்பனவு மேற்கொள் எப்படும். வடிகாண்களில் காணப் பட்ட குறைபாடுகள் ஒப்பந்தகாரர் களை அழைத்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	ஒப்பந்தகாரர்களை வரவழைத்து சரி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் செயற்திட்டத்தின் நிருமாண நடவடிக்கைகள் நிறுவனத்தால் சரியான பிரகாரம் மேற்பார்வை செய்யப்படல் வேண்டும்.

3.4 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்தின் சிரேஷ்ட நிலையில் 05 பதவிகளுக்காக 49 வெற்றிடங்கள் காணப்பட்டது. இதனிடையே பணிப்பாளர் (நிருவாகம்) பதவி மற்றும் பணிப்பாளர் (மனித குடியமர்த்தல் திட்டம் மற்றும் பயிற்சி) பதவி 2022 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாகக் காணப்பட்டது. மேலும் சிரேஷட்ட நிலையில் 04 பதவிகளாக சிரேஷ்ட விஞ்ஞானி, விஞ்ஞானி, முகாமையாளர் (தொழில்நுட்ப / ஆய்வு கூடம்) மற்றும் உதவிப் பணிப்பாளர் (நிதி) போன்ற பதவிகளி லும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 47 ஆக இருந்ததுடன் சிரேஷ்ட விஞ்ஞானி, விஞ்ஞானி, போன்ற பதவிகளில் 39 வெற்றிடங்கள் காணப்பட்டது. சிரேஷ்ட	அங்கீகாரம் பெறப்பட்டுள்ள பதவி களில் பணிப்பாளர் (மனித மீள் குடியமர்த்தல் திட்டம் மற்றும் பயிற்சி) பதவியின் சிரேஷ்ட விஞ்ஞானி பதவிகளில் 07 உம் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விஞ்ஞானப் பதவிகளில் 26 பேரைச் சேர்ப்பதற்காக பிரதமர் அலுவலகத்தில் மீளாய்வுக் கூட்டத்தில் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. பணிப்பாளர் நிருவாகம் பதவியை சேர்க்கும் நடைமுறையைத் திருத்துவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு	நிறுவனத்தின் செயலாற்றல் தொடர்பில் நேரடியாக தாக்கமளிக்கின்ற பதவி வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

நிலையில் மேற் கூறப்பட்ட பதவிகளின் பணிகள் நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு மிகவும் பங்களிப்பு வழங்குகின்றமையால் அந்தப் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை நிறுவனத்தின் செயலாற்றல் தொடர்பில் தாக்கமளித்திருந்தது.

அனுப்பப்பட்டுள் ளது. மிகுதி வெற்றிடங்கள் நிறுவனத்தின் தேவையின் பிரகாரம் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.